அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. / RLTOP: 14/2022

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 26.02.2025 |
| பெயர் ஜெகதீசன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. இவ்வழக்கின் மனுதாரர் லட்சுமி எனது மனைவி ஆவார். எனது மனைவியின் தாயாரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவர் அவரை பார்த்துக்கொள்ளும் காரணத்தினாலும் அவருக்கு பதிலாக இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன். இதேபோல் எனது மனைவி தாக்கல் செய்த மற்றோரு வழக்கில் அவர் தான் சாட்சியம் அளித்தார் என்றால் சரிதான்.

2. எனது மனைவிக்கு எந்த குறிப்பான உடல்நிலை பிரச்சனை இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை எனது மனைவி வீட்டில் இருக்கும் வாடகை தாரர் வாடகை செலுத்தாதாலும் காலிசெய்ய 2,3 முறை

கேட்டுக்கொண்ட போதிலும் காலிசெய்யாததால் அவர் வீட்டை காலிசெய்வதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தான் வாடகை தாரரிடம் சென்று மேற்சொன்னவாரு கேட்டேன். இந்த மனுவானது யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சந்திரசூரியன் , ரேவதி.

3. மேற்படி ரேவதியின் தாயார் மல்லிகா நான் இடம் வாங்கியவரின் மகள் ஆவார். மேற்படி மல்லிகா எனது பெயருக்கு பதிவு செய்யப்பட்ட அதிகாரபத்திரம் எழுதிகொடுத்தார் பின்னர் அவரது உயிர் சான்றிதழின் அடிப்படையில் மனுசொத்தை எனது மனைவி பெயருக்கு கிரையம் செய்து கொடுத்தார். நான் எத்தனை வருடங்களாக மேற்படி மல்லிகாவின் பவர ஏஜன்டாக இருந்தேன் என்றால் சொத்தை வாங்குவது பொருட்டு குறிப்பாக ஒப்பந்தம போட்டு பவர் பத்திரம் பதிவு செய்தோம் அப்போது என்னிடம் பணதட்டுப்பாடு இருந்ததால் 6,7 மாதங்கள் கழித்து பணம் வந்த பின்னர் எனது மனைவி பெயரில் கிரையம் பதிவு செய்தோம்.

4. நான் பொதுஅதிகார முகவராக இருந்த காலத்தில் வாடகை தாரர் என்று அழைக்ககூடிய ரேவதி யிடம் வாடகை எதுவும் வாங்கவில்லை. எனது மனைவி பெயரில பத்திரம் பதிவு செய்ததற்கு பிறகு எதிர் மனுதாரரிடம் இருந்து எதாவது வாடகை வாங்கியுள்ளோமா என்றால் இல்லை, நாங்கள் சென்று கேட்டோம் அவர் 2,3 மாதத்தில் காலிசெய்துவிடுவதாக தெரிவித்து வாடகை கொடுக்கவில்லை ஒப்பந்தம் போடவும் முன்வரவில்லை. நான் காலிசெய்துவிடுவதாக சொன்னது யார் என்றால் ரேவதியும் சந்திரசூரியனும்.

5. எதிர்மனுதாரருக்கு வாடகை செலுத்த முடியாததல் அவரை காலிசெய்துவிட நான் வலியுருத்தினேனா என்றால் எங்களுக்கு காலி

சுவாதினம் தேவை பட்டதால் வலியுருத்தவில்லை. காலிசெய்துவிடுவதாக கூறியதை எனது அறிவிப்பிலோ பிரமாணவாக்கு மூலத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது அறிவிப்பிலும் மனுவிலும் எதிர்மனுதாரரின் தாயார் (எங்களுக்கு வீட்டை விற்றவர்) 2 மாதங்களில் வீட்டை காலி செய்து காலி சுவாதினத்தை ஒப்படைப்பாதாக குறிப்பிட்டு கூறினார் என்று சொல்லியுள்ளேன் ஆனால் தற்போது எதிர்மனுதாரர் கூறியதாக வழக்கிற்காக மாற்றி கூறுகிறேன் என்று சொன்னால சரியல்ல.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணை வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)